(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 28.]

பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

2025 பெப்ரவரி 27, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

105/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் வினாத்தாள்கள் அல்லது வினாத்தாள்களில் உள்ளடங்கியுள்ள வினாக்கள், மேற்படி பரீட்சை நடைபெற்ற திகதிக்கு முன்னர் வெளித்தரப்பினருக்கு கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

153/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் கொள்ளளவு (Installed Capacity) வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலமாக தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ள வலுசக்தியின் அளவு ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இலங்கையில் காற்றாலை மூலமான மின் உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

188/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை யானை வேலிகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் யானை-மனித மோதல்களால் உயிரிழந்த யானைகளினதும், ஆட்களினதும் எண்ணிக்கை மற்றும் சொத்துச் சேதங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) யானை வேலிகளை அமைப்பதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்டுள்ள தொகைக்கு நிகராக, யானை-மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காததை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், யானை-மனித மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

291/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "கொவிட் – 19" பெருந்தொற்றினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கு பொருத்தமான இடமாக அடையாளம் காணப்பட்ட மட்டக்களப்பு "மஜ்மா நகர்" மயானமானது இடுகாடுகள், சுடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உரித்தாகும் உள்ளூராட்சி நிறுவனம் யாது;

(ii) மேற்குறிப்பிட்ட மயானத்தின் பரப்பளவு யாது;

(iii) மேற்குறிப்பிட்ட காணி அரசாங்கத்துக்கு உரித்தானதா;

(iv) ஆமெனில், மேற்படி காணி சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பிப்பாரா?

(v) மேற்படி சுவீகரிப்புக்கான நட்ட ஈடு செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மயானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ள நிதித்தொகை மற்றும் தனிப்பட்ட தரப்பினர்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தனியார் தரப்பினரால் வழங்கப் பட்டுள்ள இயந்திரசாதனங்கள் உள்ளிட்ட ஏனைய சொத்துக்கள் யாவை?

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

389/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தலைவர் உள்ளடங்கலாக, தற்போதைய ஊவா மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தலைவர் உள்ளடங்கலாக அத்தகைய ஒவ்வோர் அங்கத்தவரினதும் பெயர், இதற்கு முன்னர் பணியாற்றிய நிறுவனம், வகித்த பதவி மற்றும் நிறைவேற்றிய சமூகப் பணிப்பொறுப்பு என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தலைவருக்கும் மற்றைய அங்கத்தவர்களுக்கும் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) இதற்கு முன்னர் இயங்கிய ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட எட்டாம் நாள்) — குழு ஆய்நிலை.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

“ஒதுக்கீடு” எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.